பெண் : நாம் ஓர் கனவு கண்டோம்
எமக்கு ஒரு நாடு வரும் எனக்கொண்டோம்

ஆண் : நாழும் பொழுதும் அதற்கே மாண்டோம்
அந்த நாளும் விரைந்து வந்தது கண்டோம்

பெண் : சிங்கள அரசின் நிர்வாகம் இனி
எங்கள் நாட்டில் நடக்காது 2
ஆண் : தங்களின் குறைகளை தீர்ப்பதற்கே
இங்குள் மக்களே எழுந்து விட்டார்

பெண் : புயலாய் இளைஞர் புறப்பட்டார்
கயவர்கள் இல்லை நாட்டுக்குள்ளே 2
ஆண் : அயலவர் யாவரும் ஒன்று பட்டார்
துயர் வரவில்லை வீட்டுக்குள்ளே

பெண் : சூழ்ந்திடும் பகவனை ஓட விரட்டி
சொர்க்கம் ஒன்றினை பூமியில் கட்டி 2
ஆண் : வாழ்ந்திடும் நாள் வெகு தூரமில்லை
என மகிழ்ந்திருந்தோம் ஆடிப்பாடி 2